# COVID-19 ஏஜென்சி தகவல் தாள்

Department of Children, Youth, and Families (DCYF) இந்தத் தகவல் தாள் மே மாதம் 27, 2020 அன்று புதுப்பிக்கப்பட்டது. DCYF தேவைப்படும்போது எல்லாம் இந்த ஆவணத்தைப் புதுபிக்கும். மேலும் தகவலுக்கு **dcyf.wa.gov**. -ஐ பார்க்கவும்

COVID-19 வைரஸ் பரவுவதைத் தடுக்க DCYF, அவர்களின் அனைத்துக் கட்டிடங்களிலும் பொது வரவேற்பறையை மூடிவிட்டார்கள் மற்றும் நேரில் வணிகம் நடத்துவதில்லை.

**தனி நபர் பாதுகாப்பு உபகரணங்கள் (PPE)**

- கையுறைகள், மாஸ்க்குகள், ஆடைகள், காலணிகள் மற்றும் முக கவசங்கள் ஆகியவை இதில் அடங்கும்.
- DCYF -க்கு PPE -கள் கிடைக்கப்பெற்றன மற்றும் அதை 24/7 மணி நேரம் வேலை நடைபெறும் இடங்களில் மற்றும் COVID-19 வைரஸ் பாதிப்பிற்கு சாத்தியமான வெளிப்பாடு உள்ள ஊழியர்களுக்கும் வழங்குகிறது. மேலும் நிறைய PPE -கள் தேவைப்படுகிறது மேலும் அதை பெறுவதற்கு நாங்கள் முயற்சிக்கிறோம்.

## குடும்பங்களுக்குக்கான உதவி திட்டங்கள்.

**வீட்டுக்கு வருகை புரிதல்**

- மார்ச் மாதம் வீட்டுக்கு வருகை புரிபவர்களை, நேரில் செல்ல வேண்டாம் என்றும் தொலைபேசி மற்றும் வீடியோ மூலம் தொடர்புகொள்ள வேண்டும் என்றும் DCYF கேட்டுக்கொண்டது. மெய்நிகர் வருகைகள் ஜூன் மாதம் 30 ஆம் தேதி வரை தொடரலாம். வீட்டுக்கு நேரில் சென்றுக்கொண்டிருந்த சிலர் வீடியோ அல்லது இணைய அடிப்படையிலான வருகைகள் மற்றும் தொலைபேசி, மின்னஞ்சல் அல்லது குறுஞ்செய்தி முறைகளை பயன்படுத்துகின்றார்கள். சிலர் பொருட்களை வீட்டுக்கு சற்று பாதுகாப்பான தூரத்தில் வைத்துச் செல்கிறார்கள்.
- DCYF Home Visiting Service Account (ஹோம் விசிட்டிங் சர்வீஸ் அக்கவுன்ட்) (HVSA) நிதியளிக்கப்பட்ட திட்ட வழங்குனர்களை ஜூன் மாதம் 30 ஆம் தேதி வரை நேரில் செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொண்டது.
    - இந்த நேரத்தில், அனைத்து தேவைகளும் பூர்த்தி செய்யப்படாவிட்டாலும், DCYF அனைத்து கணக்குகளுக்கும் தேவையான் கட்டணத்தை வழங்கும்.

**Early Support for Infants and Toddlers (குழந்தைகள் மற்றும் கைக்குழந்தைகளுக்கான ஆரம்பகால உதவிகள்) (ESIT)**

- ஆரம்பகால உதவி வழங்குநர்கள் ஜூன் மாதம் 30 ஆம் தேதி வரை தொலைபேசி மற்றும் வீடியோ அழைப்புகளைப் பயன்படுத்துகின்றனர், எனவே குழந்தைகள் மற்றும் வழங்குநர்களிடையே பாதுகாப்பான தொடர்பு இருக்கும்.

## குழந்தை நலம்

**தொலைபேசி எண்**

- DCYF -யின் கட்டணமில்லாத 24/7 எண் மற்றும் துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு hotline எண் 1-866-363-4276 தொடர்ந்து செயல்படும்.

**நேரில் வருகை புரிதல்**

- DCYF நேரில் வருகை புரிதலை மீண்டும் தொடங்குகிறது, ஆனால் இந்த COVID-19 நோய்த்தொற்று காலத்தில், அந்த வருகைகள் நேரில் மற்றும் மெய்நிகரின் ஒரு கலவையாக இருக்கலாம்
- குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக, DCYF தொடர்ந்து சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது புறக்கணிப்பு புகார்களை நேரில் வந்து விசாரணை செய்கிறது.
- பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் இந்த சந்திப்புகள் முடிந்தவரை பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் மற்றும் DOH சுகாதார வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகளைப் பின்பற்றுமாறும் DCYF வழங்குநர்களுக்கு அறிவுறுத்துகிறது.

**வளர்ப்பு பராமரிப்பு உரிமம்**

- DCYF அவசரகால வளர்ப்பு பராமரிப்பு சலுகைகள் மற்றும் விதிவிலக்குத் திட்டங்களை குடும்பங்களின் உதவிக்காக உருவாக்கி இருக்கிறது.
  - COVID-19 காலகட்டத்தில் வாஷிங்டன் நிர்வாக விதிகளை பூர்த்தி செய்ய முடியாத வளர்ப்பு பராமரிப்பு வழங்குநர்கள் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய விருப்பங்களைப் பற்றி தெரிந்துக்கொள்ள அவர்களின் பிராந்திய உரிமை வழங்குநர்களைத் தொடர்பு கொள்ள வேண்டும்.
  - வளர்ப்பு பராமரிப்பு பெற்றோர்கள் பணி மேற்கொள்வதைப் பற்றி தெரிந்துக்கொள்ள 1-888-543-7414 என்ற தொலைபேசியில் அழைக்கவும்.
- DOH குறிப்பிட்டபடி மற்றும் கவர்னரின் அறிவுறுத்தல்படி எல்லோரும் சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் என்றும் DCYF அறிவுறுத்துகிறது.

**பின்னணி விசாரணை**

சுழற்சி நேரங்களைக் குறைக்கவும், பாதுகாப்பாக தடைகளை அகற்றவும் மற்றும் குழந்தைகளுக்கு பராமரிப்பை வழங்கக்கூடிய நபர்களை மதிப்பீடு செய்யவும் DCYF குழந்தைகள் நலன் மற்றும் ஆரம்பகால கற்றல் திட்டங்களுக்கான பின்னணி விசாரணைகளில் மாற்றங்களைச் செய்தது,

## குழந்தை பாதுகாப்பு

- குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் மற்றும் குடும்பங்களுக்கு வீடு வழங்குபவர்கள் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் உட்பட ஒரு அறைக்குள் மொத்தம் 10 பேருக்கு மேல் இருக்க அனுமதிக்கக்கூடாது. ஒரு குழுவிற்கு மேல் பிரித்து வைக்க மையத்தில் இட வசதி இருந்தால், அப்படி செய்யலாம்.
- முதலில் செயல்பட வேண்டியவர்களுக்கும், அத்தியாவசிய பணியாளர்களுக்கும் குழந்தை பராமரிப்பு தேவை (செவிலியர்கள், மருத்துவர்கள், சட்டத்தை அமல்படுத்துபவர்கள், தீயணைப்பு வீரர்கள், துணை மருத்துவர்கள் மற்றும் சமூக சேவையாளர்கள்). அத்தியாவசிய பட்டியலில் உள்ள குடும்பங்களுக்கும், சமூகத் தேவைகளின் அடிப்படையில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய குழந்தைகளுக்கும் வழங்குநர்கள் சேவை செய்ய வேண்டும் என DCYF பரிந்துரைக்கிறது.
- CARES சட்டத்தின் கீழ் குழந்தை பராமரிப்பு வழங்குநர்களுக்கு DCYF உதவி அளிக்கிறது. **wacompass.force.com/PP_LoginPage**, இந்த வலைதளத்தில் சேவை வழங்குநர்கள் ஜூன் மாதம் 30 ஆம் தேதிக்குள் அல்லது நிதி கிடைக்கும் வரை மானிய நிதிக்கு விண்ணப்பிக்கலாம்

**குழந்தை பராமரிப்பு மானியம்**

- DCYF நடவடிக்கைகளுக்கான விதிகளை மாற்றுகிறது, எனவே இந்த தருணத்தில் குடும்பங்கள் குழந்தை பராமரிப்பை அணுகலாம்.
    - 12 மாதங்களுக்கு ஒருமுறை குடும்பங்கள் குழந்தை பராமரிப்பிற்கு மறு அங்கீகாரம் வழங்க வேண்டும், மேலும் அந்த தகுதிக்கான விதிமுறைகளும் இருக்கிறது. DCYF விதிகளை நெகிழ்வுடையதாக மாற்றுவதால் குடும்பங்கள் எளிதாக தகுதி பெற முடியும்.
    - அவர்களின் சூழ்நிலைகளையும் செயல்பாடுகளையும் தெரிவிக்க வேண்டும் என்கின்ற குடும்பங்கள் மட்டுமே மறு விண்ணப்பம் செய்ய வேண்டும்.
    - குடும்பங்கள் தங்கள் தகுதிகளை தக்க வைத்துக்கொள்வதற்கும் மறு விண்ணப்பம் செய்வதற்கும் நாங்கள் ஊக்குவிக்கிறோம், இதனால் குழந்தை பராமரிப்பு தேவைப்படும்போது அவர்களால் அணுக முடியும்.
    - பணி தொடர்பு சம்பந்தப்பட்ட குழந்தை பராமரிப்பு பெறுபவர்களின் ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களுக்கான இணை கட்டணங்களை DCYF தள்ளுபடி செய்கிறது. அடிப்படை கட்டணம் மற்றும் ஒரு குடும்பம் செலுத்த வேண்டிய இணை தொகை உள்ளிட்ட முழுத் தொகையையும் DCYF வழங்குநர்களுக்கு வழங்கும்.

**ஆரம்பகால சாதனையாளர்கள் பங்கேற்பாளர்கள்**

- ஆரம்பகால சாதனையாளர்களில் பங்கேற்கும் வழங்குநர்கள் தர மேம்பாட்டு விருதுகளையும், பதிவுசெய்தல் அடிப்படையிலான கட்டணத்துடன் இணைக்கப்பட்ட திருப்பிச் செலுத்தும் விகிதங்களையும் தொடர்ந்து பெறுவார்கள். கவர்னர் Inslee ஆரம்பகால சாதனையாளர்களின் காலக்கெடு மற்றும் தேவைகள் தொடர்பான சட்டங்களைத் தள்ளுபடி செய்தார், அவை பணம் செலுத்துவதில் பாதிப்பை ஏற்படுத்தாது.

## Juvenile Rehabilitation (குழந்தைகள் மறுவாழ்வு) (JR)

- DCYF நேரில் வருகை புரிவதற்கு பதிலாக வீடியோ மூலம் தகவல் பரிமாற்றத்திற்கு மாற்றி அமைக்கிறது.
- 24/7 பணி இடங்களுக்கு வரும் அனைத்து ஊழியர்கள் மற்றும் விற்பனையாளர்களும் COVID-19 அறிகுறிகளுக்கு முன்- திரையிடப்பட வேண்டும்.
- JR கட்டிடத்திற்குள் செல்வதற்கு முன்பு, ஊழியர்கள், விற்பனையாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் அறிகுறிகள் கொண்ட யாருடனும் தொடர்பு கொண்டுள்ளார்களா என்று விசாரிக்கப்படுவார்கள்.
- எல்லா ஊழியர்கள், தங்கி இருப்பவர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களும் இடத்திற்குள் நுழையும்போது கைகளை கழுவுவது அவசியம்.
- நங்கள் இந்த இடத்தை அடிக்கடி கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்வோம், குறிப்பாக அதிகமாக தொடர்பு ஏற்படக்கூடிய இடங்களை.
- தங்கி இருப்பவர்களில் யாருக்கேனும் உடல் நிலை சரி இல்லை என்றால், உடனே ஊழியர்களிடம் தெரிவிக்க வேண்டும்.
- யாராவது உடல்நிலை சரியில்லாமல் இருந்தால், ஊழியர்கள் உடனடியாக ஒரு மருத்துவ வழங்குநரைத் தொடர்புகொண்டு குடும்பத்தினருக்கு அறிவிப்பார்கள்.

## தொடர்பு

உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் DCYF வலைத்தளத்தில் இருக்கும் தொடர்பு எண்களை அழைக்கவும் அல்லது இந்த மின்னஞ்சல் முகவரிக்கு எழுதவும் **dcyf.covid-19@dcyf.wa.gov**.

இந்த ஆவணத்தின் நகல்கள் வேறு வடிவத்தில் அல்லது மொழியில் உங்களுக்கு தேவை என்றால், DCYF Constituent Relations (1-800-723-4831 | 360-902-8060, **ConstRelations@dcyf.wa.gov)**, ஐ தொடர்பு கொள்ளவும்.

DCYF PUBLICATION COMM_0078 (05-29-2020) ENGLISH TAMIL (தமிழ்) – TM